
Price 50 Ps. only

# நற்கருணை வீரன்

இதழ் 54 ஜனவரி 2007 எண் 1



புதுவாழ்வைத் தேடி...

காட்டின் நடுவே ஒரு பெரிய ஆசிரமம் இருந்தது. அதில் எத்தனையோ துறவிகள் வாழ்ந்து வந்தனர். அவர்களின் அறிவுரையைக் கேட்கவும், அந்த அமைதியான சூழ் நிலையில் தியானம் செய்யவும் மக்கள் கூட்டங் கூட்டமாய் அங்கு வந்து கொண்டிருந்தனர். நிறைய இளைஞர்களும் அந்த ஆசிரமத்திற்கு வந்து மன அமைதி பெற்றுச் சென்றார்கள்.

ஆனால் நாளடைவில் அங்கிருந்த துறவியரின் வாழ்க்கை முறையில் மாற்றம் ஏற்பட்டது. அவர்களிடம் போட்டி மனப்பான்மையும், ஆணவமும், தன்னலமும் தலைதூக்கத் தொடங்கின. ஒருவர் மற்றவருக்கு மரியாதை கொடுப்பதும் இல்லை; பிறருடைய தேவை களைப் பற்றிக் கவலைப்படுவதும் இல்லை. இதனால் மக்களுக்கு அந்த ஆசிரம சூழ்நிலை பிடிக்கவில்லை. சிறிது சிறிதாக அந்த ஆசிரமம் வெறிச்சோடிக்கிடக்கத் தொடங்கியது.

இந்தப் பரிதாபமான நிலையைக் கண்ட ஆசிரமத்தின் தலைமைக் குரு இதற்குத் தீர்வு காண நினைத்தார். எனவே தூரத்தில் ஒரு குகையில் வாழ்ந்து வந்த ஒரு முனிவரிடம் சென்று தனது ஆசிரமத்தின் தாழ்ந்த நிலையை எடுத்துக் கூறி, அறிவுரை கேட்டார். அப்போது அந்த முனிவர் கண்களை மூடி, அமைதியாக தியானத்தில் ஈடுபட்டார். அதன் பிறகு அவர் தலைமைக் குருவிடம் "உங்கள் ஆசிரமத்தில் உள்ள துறவிகளில் ஒரு மாபெரும் இறைத்தூதர் இனம் தெரியாதபடி மறைந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவரை நீங்கள் அடையாளம் கண்டுகொண்டால் போதும். தற்போதுள்ள சூழ்நிலை மாறி ஆசிரமம் மறுபடி பொலிவுடனும் மகிழ்ச்சியுடனும் விளங்கும், கவலைப்படாமல் சென்று வாருங்கள்" என்று கூறி அவரை அனுப்பி வைத்தார்.

தலைமைக் குருவிற்கு முனிவர் கூறிய வார்த்தைகள் புதுமையாகவும் புதிராகவும் இருந்தது. ஆசிரமத்திற்குத் திரும்பி வந்த உடனே எல்லாத் துறவிகளையும் அழைத்து, அவர்களிடம் முனிவர் கூறிய செய்தியைச் சொன்னார். அவ்வளவுதான். அங்கிருந்த துறவியர் வியப்புடன் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். "நம்மில் யார் அந்த மகானாக இருக்க முடியும்?" என்ற கேள்வி அனைவரது மனத்திலும் இருந்தது. அன்றிலிருந்து பிறரிடம் பேசும்போது 'இவர்தான் அந்த மாபெரும் இறைவாக்கினராக இருப்பாரோ' என்று நினைக்கத் தொடங்கினர். அதனால் அவர்கள் பிறரிடம் மிகவும் மரியாதையுடனும் அன்புடனும் பழகி வந்தார்கள். யாரும் யாரையும் இழிவாகப் பார்ப்பதோ, அவர்களைப் பற்றிக் குறைவாகப் பேசுவதோ இல்லை.

இவ்வாறு அவர்களின் வாழ்க்கைக் கண்ணோட்டமே மாறிவிட்டது. சிறிதுசிறிதாக அன்பும் ஒற்றுமையுணர்வும் அங்குள்ள துறவிகளிடம் சிறப்புற்றுத் திகழ்ந்தது. காலப்போக்கில் மக்களும் கூட்டங் கூட்டமாய் முன்பு போலவே வரத் தொடங்கினார்கள். ஆசிரமத்தில் பக்திப் பரவசமுள்ள பாடல்களும், அறநெறி போதனைகளும் முழங்கின. அவை அங்கிருந்த ஆலயத்தின் மணியோசையில் கலந்து எட்டுத் திக்கும் எதிரொலித்தன.

புத்தாண்டில் புதுவாழ்வைத் தேடும் உங்களுக்கு தெரியவேண்டிய இரகசியம் இதுதான்: 'உள்ளுவதெல்லாம் உயர்வு உள்ளல்' இருந்தால் புதுவாழ்வு உங்களைத் தேடிவரும். வாழ்க, வளர்க, வளமை பெறுக!

*அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!*

## இரண்டு தங்க நகைகள்




பொற்கொல்லன் ஒருவன் தனக்கு உதவி செய்ய, உண்மையுள்ள, புத்திக் கூர்மையுள்ள, கடுமையாக உழைக்கக் கூடிய ஆற்றலும் கொண்ட ஒரு சிறுவனை வேலைக்கு வைத்திருந்தான். ஒருநாள் அப் பொற்கொல்லனின் இரு தங்க நகைகள் காணாமல் போய்விட்டன. அவன் அவற்றை அப்பையனின் படுக்கைக்கு அருகில் இருந்த சுவரில் உள்ள ஒரு பொந்தில் மறைத்து வைக்கப் பட்டிருந்ததைப் பார்த்தான். சிறுவன்தான் திருடியிருக்க வேண்டும் என எண்ணி அவன்மேல் பழியைச் சுமத்தினான் பொற்கொல்லன். அச் சிறுவனோ, "எனக்கு ஒன்றும் தெரியாது, உண்மையாகவே இந்த நகைகளை நான் பார்த்ததே இல்லை. நான் குற்றமற்றவன் என்று கூறி, குற்றச்சாட்டை மறுத்தான். ஆனால் அவன் கூறுவதைக் கேட்காமல், 'நீ திருடன், பொய் சொல்லுகிறாய்' என்று கூறி, அவனைக் கொடூரமாக அடித்து, வீட்டைவிட்டு விரட்டிவிட்டான்.

ஓரிரு நாள் கழித்து, மீண்டும் அந்த நகைகளை அதே பொந்தில் பொற்கொல்லன் பார்த்தான். இது எப்படி நடக்கிறது என்று கவனித்தான். அவன் வளர்க்கும் புறாதான், அவனது மேசையிலிருந்து நகைகளை எடுத்து, அங்கு வைக்கிறது என்று கண்டு பிடித்தான். பின்பு, தான் தவறாக முடிவுசெய்து நல்ல பையனுக்கு அநீதி செய்துவிட்டதை எண்ணி மனம் வருந்தினான். ஆனாலும் அது காலம் கடந்த ஒன்று. இம்மனிதன் அச்சிறுவனை அநீதியாகத் தீர்ப்பிட்டுவிட்டான்.

நீங்களும் ஒரு சில வேளைகளில் இவ்வாறு பிறரைத் தவறாக எண்ணித், தீர்ப்பிடு கின்றீர்களா? இனிமேல் ஒருநாளும் அவ்வாறு செய்வதில்லை என்று உறுதி எடுத்துக்கொள்ளுங்கள்.

## இதோ, இந்த மனிதனைப்பாருங்கள்!

போர்வீரர்கள் சூட்டிய முள்முடி துளைத்ததால் இயேசுவின் தலையிலிருந்து இரத்தம் கொட்டியது. அவர்களின் கசையடியால் அவருடைய உடல் புண்ணாகியது. அவர்கள் காறி உமிழ்ந்த எச்சில் அவர் முகத்தில் ஒட்டிக் கிடந்தது. இத்தகைய உருக்குலைந்து, சிதைந் திருந்த இயேசுவின் முகத்தைப் பார்த்த எந்தக் கடினமான உள்ளமும் கரைந்துவிடும். அவரைப் பார்த்து ஆளுநரான பிலாத்துவே அதிர்ச்சியடைந்தான். அந்த அதிர்ச்சியைத்



தாங்கிக்கொள்ள முடியாமல், ஆளுநர் மாளிகை முன் கூடியிருந்த மக்களைப் பார்த்து "இதோ, இந்த மனிதனைப் பாருங்கள்" என்று அவர்களுக்கு இயேசுவைச் சுட்டிக் காட்டினான். ஆனால் அங்கிருந்த கூட்டமோ "இவனைச் சிலுவையில் அறையும்... சிலுவையில் அறைந்து கொல்லும்" என்று உரக்கக் கூவியது.

இருப்பினும் பிலாத்து இயேசுவை விடுதலை செய்ய நினைத்தார். எனவே, "நான் இவனில் எந்தக் குற்றமும் காணவில்லை" என்றார். அப்போது மக்கள் கூட்டம் "இவனை விடுவித்தால் நீர் செசார் மன்னனுக்கு எதிரியாகிவிடுவீர்" என்று எச்சரித்தது. பிலாத்து தனது பதவி பறிபோய்விடுமே என்று பயந்து, மாசற்ற இயேசுவை அவர்கள் விருப்பப்படி சிலுவையில் அறைந்து கொல்லுவதற்கு ஆணையிட்டான்.

அதிகாரமும் பதவியும் நிலையானவையல்ல. அன்பும் அறனுமே அழியாதவை. தீய சக்திகளுக்குப் பயந்து அன்பையும் அறனையும் புறக்கணிப்பது கோழைத்தனம்.

(தொடரும்)


# அடிமை பாஸ்கர்

## மகிழ்ச்சிக்குரிய முடிவு (16)



ராணியின் தந்தை பாஸ்கரைக் கொல்ல தன் வேலையாட்களுடன் அவனைத் தேடுவதையும் அவனைக் காப்பாற்ற அவன் தங்கை புஷ்பா தன்னை அனுப்பியிருப்பதையும் ராணி பாஸ்கரிடம் கூறினாள். அதைக் கேட்ட பாஸ்கருக்கு உடல் சிலிர்த்தது. பாஸ்கர் கத்தியால் வெட்டிய அவனது தங்கை புஷ்பா அவனை ஏன் மன்னித்தாள்? பாஸ்கர் ரோடாவைக் கொல்ல முயற்சி செய்திருந்த போதிலும் ரோடாவின் மகளான ராணி ஏன் பாஸ்கரின் உயிரைக் காப்பாற்ற விரும்பினாள்? இந்த இரு கேள்விகளும் பாஸ்கரின் மனதில் எழுந்தன. ஆனால் அவனுக்குப் பதில் தெரிய வில்லை. அப்போது ராணி மனிதரனைவரும் இறைவனின் பிள்ளைகள் என்றும், மனிதர்களின் மீது கொண்ட அன்பினால் இறை இயேசு மனிதனாய்ப் பிறந்து தன் உயிரையே தியாகம் செய்தார் என்றும், மனிதர்கள் அனைவரும் சகோதரர்கள் போல் ஒருவரை ஒருவர் மன்னிக்க வேண்டும் என்றும் பாஸ்கருக்கு விளக்கிக் கூறினாள்.

அப்போது ராணியின் தந்தை தன் வேலையாட்களுடன் அங்கு வந்து சேர்ந்தார். வேலையாட்கள் பாஸ்கரைக் கண்டதும் தங்கள் கத்திகளையும், தடிகளையும் ஓங்கினார்கள். ஆனால் ராணி அவர்களை மறித்து பாஸ்கரைக் காப்பாற்றினாள். பின்னர் பாஸ்கரை மன்னிக்கும்படி தன் தந்தையிடம் கெஞ்சிக் கேட்டாள். ரோடாவும் பாஸ்கரை மன்னித்தார்.



புஷ்பா, ராணி இவ்விருவரின் முன்மாதிரிகையால் பாஸ்கர் கிறிஸ்து நாதரை அறிந்து, அவர்மீது அன்பு கொண்டு, கிறிஸ்துவ மதத்தில் சேர்ந்தான். பின்பு அவனுடைய நடத்தையும் திருந்தியது. ரோடா அவனைத் தன் வேலைக்காரனாக ஏற்றுக் கொண்டார். பாஸ்கர் தன் தங்கை புஷ்பாவுடன் ஒரே வீட்டில் பல ஆண்டுகள் மகிழ்ச்சியாக வாழ்ந்தான்.

*(நிறைவு)*

## புனிதர் மரிய வியான்னி



89 சுற்றுப் புறங்களில் பல அனாதைக் குழந்தைகள் இருந்தனர். அவர்கள் மீது தந்தைக்கு இரக்கம் சுரந்தது. பள்ளி அருகே ஒரு சிறிது நிலம் வாங்கி ஒரு கருணை இல்லத்தை எழுப்பினார். அவரே உடனிருந்து கல்லும் மண்ணும் சுமப்பதும், தச்சருக்கு மரம் தூக்கிக் கொடுப்பதுமாக எடுபிடி வேலைகளைச் செய்தார். விரைந்து எழுந்த அந்தக் கட்டிடத்திற்குப் பராமரிப்பு இல்லம் என்று பெயரிட்டார்.

90 பராமரிப்பு இல்லத்தில் விரைவில், குழந்தைகள் முதல் 18 வயதுப் பெண்கள் வரை உள்ள அனாதைகள் 60 பேருக்கும் அதிகம் சேர்ந்தனர். தெருவில் பார்த்த ஓர் ஆறு வயதுச் சிறுமியை அழைத்து வந்தார். "கடவுள் அனுப்பியுள்ள இந்தச் சிறுமிக்கு வரவேற்புக் கொடு என்றார். கேத்தரீன், "தந்தையே படுக்கை இல்லையே" என்றாள். "ஏன் உனது படுக்கை இல்லையா?" என்றார் தந்தை வியான்னி! தந்தையின் விசுவாசத்தையும் இறைவனின் பராமரிப்பையும் நம்பி அவளைக் கேத்தரீன் ஏற்றாள்.



91 அத்தனை பேருக்கும் உணவூட்டுவது எளிதாயில்லை. பராமரிப்பு இல்லத்திற்கென தனி வருமானமும் இல்லை. தந்தை தனது வருமானம் முழுவதையும் தருகிறார். நாற்காலி, மேசை போன்றவற்றை விற்றுத் தருகிறார். அப்படியும் பற்றவில்லை. ஒரு நாள் ஜான் மரி மாவு இல்லை என்று வேதனையுடன் தந்தையிடம் சென்றாள். "செபித்துக் கொண்டே உணவைத் தயார் செய்" என்றார் தந்தை. இருந்த மாவு பொங்கியது! கடவுள் அவ்வளவு நல்லவர்! தந்தை அவ்வளவு எளியவர்!



92 இன்னொரு நாள் கருணை இல்லத்தில் ஒரு புதுமை நடந்தது. 1829ஆம் ஆண்டு அறுவடை மிகக் குறைவு. அதனால் சேமிப்பு அறையில் கோதுமை விரைவில் தீர்ந்து விட்டது. சேமிப்பு அறையிலிருந்து கடைசியாக எடுத்த ஒரு கைப்பிடி கோதுமையைத் தவிர வேறெதுவும் இல்லை. என்ன செய்வது? அனாதைகளை அனுப்பிவிடுவதா? "ஒருக்காலும் இல்லை" என்றார் வியான்னி. எந்தச் சூழ்நிலையிலும் அவர்கள் இங்கேதான் இருப்பார்கள். "இன்றைய உணவை எங்களுக்குத் தந்தருளும் என்று செபியுங்கள்" என்றார்.



(தொடரும்)

RNI 1316 / 57

26th of every month

Pandianagar S.O.

REGD. TN/SR/DDL-225/2006-2008
Licensed to Post without Prepayment / TN/WPP - 62/SR/2006 - 2008

Edited & Published by Rev.Fr.M.S.Savariraj, S.J., and Printed at St.Mary's Press, Beschi College, P.B.No.90, Dindigul - 624 001, TamilNadu. ✆ (0451) 2432188



# இறைவனுக்குச் செவிமடு

சகோதரி ஜூலி, தன் வகுப்பு மாணவ, மாணவிகளுக்கு ஒரு கருத்தை வலியுறுத்த விரும்பினார். அதற்காக, விவிலியத்திலிருந்து இவ்வார்த்தைகளை வாசித்தார்: 'இதோ நான் உங்கள் கதவருகே நின்று தட்டுகிறேன்'. வாசித்ததும் வகுப்பை விட்டு வெளியே சென்றார். உடனே சிறுவர்கள் சத்தம் போட ஆரம்பித்தனர். அந்தச் சத்தத்திற்கிடையில் கதவு திறந்தது. சகோதரி ஜூலி அங்கே நின்றுகொண்டு, 'நான் தொடர்ந்து கதவைத் தட்டிக்கொண்டிருந்தேனே, ஏன் நீங்கள் அதைக் கேட்கமுடியவில்லை?' என்று கேட்டார். அதற்கு மாணவ மாணவியர், 'இங்கு அதிக சத்தம் நிலவியதால் கேட்கமுடியவில்லை' என்றனர்.

அச்சகோதரி மீண்டும் வகுப்பைவிட்டு வெளியே சென்றார். இம்முறை யாரும் பேசவே இல்லை. சிறிது நேரம் கழித்து, கதவை மெதுவாகத் தட்டும் சத்தம் கேட்டது. அதைக் கேட்டுச் சகோதரிக்குக் கதவைத் திறந்துவிட்டனர். 'நாங்கள் அமைதியாக இருந்ததால் நீங்கள் கதவைத் தட்டியதைக் கேட்கமுடிந்தது' என்றனர். நீ நாள்முழுவதும் விளையாட்டைப் பற்றியோ, கேளிக்கை களைப் பற்றியோ நினைத்துக் கொண்டிருந்தால், உன் உள்ளத்தில் அமைதி நிலவாது. கடவுளின் குரலைக் கேட்க முடியாது. இந்த எண்ணங்களை எல்லாம் விடுவித்துக்கொண்டு உன் உள்ளத்தில் இறைவனின் பிரசன்னத்தை உணரவேண்டும். அவர் உன்னிடம் பேசுவார்.

நீ தூய்மையாகவும், அன்புடனும், அனைவருக்கும் நன்மை செய்யும்படியும் அவர் உன்னிடம் கூறுவார். நீயும் அவருடன் பேசலாம். உன் நற்செயல்களால் அவரை மகிழ்ச்சிப்படுத்த விரும்புவதாக அவரிடம் கூறு.